ஸ்ரீராமபிரான அந்தப்புரத்தைவிட்டெழுந்தருளுங்காலையில், ஸ்ரீராம பிரான் வனவாசம போகின்றாரென ஸ்ரீசக்கரவர்த்தியாரது தேவிமார்களெல் லோரும் கேட்டுக் கடுஞ்சோகங்கொண்டு வாய்விட்டலறிப் புலம்பத்தொடங் கினார்கள். தந்தை கட்டளையிடாவிடினும், நம்மெல்லோருடைய காரியங் களையுந் தலையினறி முடித்துத் தஞ்சமும் ரக்ஷகனுமாகிய சக்கரவர்த்தித் திருமகனவனம்போகின்றனே! பிறந்ததுமுதல் கோஸலையிடத்தும, அவளிட த்துப்போல நம்மிடத்தும் பக்தி விசுவாசம்வைத்து, நம் குற்றேவல்களைச் செய்கின்றனனே! யாவரேனும ஒருவர்சினஙகொண்டிவைதாலும, தான்பேற்ற மெனபது சிறிதும் கொளளாமல், ஒருவா சினஙகொளளத்தக்க செயல் கீக்கி, சினங்கொண்டவாகளையும், நன் மொழிகூறிச சமாதானஞ் செய்கின்ற னனே ? நம் புரவலாபெருமான மதியிலராகி, சகல பூதங்களுக்குந் தஞ்ச மாகிய ஸ்ரீராமசந்திரனைக காட்டுக்குச்செல்ல விடுக்கின்றாரே! இனி இவவுல கினை யழிகினறாரே யனறி, இவவுலக மினபுறுதென் றிவவகையாக மஹா ராஜனை யிகழ்ந்து, நெடுங்குரலிட்டழுதனர்கள். இவவழுகுரல் கேட்டு, வேந்தர்பிரானும், யாவரும் பழிகவும், நகைக்கவும், இடமாயினேனே யென்று துயரமும், நாணமுங்கொண்டு, அந்த ஆசனத்தின்மீதே அடங்கி யொடுங்கி வருந்தினர். சக்கரவர்த்தித் திருமகளுமு தாம் வனவாசம் போவதில் சிறிதும துயரமுறாவிடினும, தமபொருட்டெல்லோரும் இவ் வண்ணம வருந்தினறார்களேயென மிகவும் தக்கங்கொண்டு, இருபபுச் சங்கிலிபோட் டிறுக்கிகட்டிய களிறுபோல நெட்டியிாப்பெறிந்து, புலன் களையடக்கித் தம்பியுடன் கோஸலைதேவியி னகதப்புரவாயலிலெழுந்தருளி, அயலுளளவர்களால், ஜயவிஜயீபவவென்று வாழத்தப்பட்டவராகி, முதற பிராகாரநதான்டி, இரண்டாவது பிராகாரத்தில், வேதமோதும் வேதியர் களைக்கண்டு வந்தனஞ்செய்து, மூன்றுவது பிராகாரம் புகுந்து, அங்கு வாழ்கின்றகும் பாலவிருத்தாளாகிய பெண்களாலும் ஜயவென வாழத்தப் பட்டு, அவர்களைத் தம் வரவைத் தெரிவிக்குமபடி தாயிடம் மூன் விடுத் தத் தாமு முடனே பின்புகுந்து மாதாவைக் கண்டருளினார். அப்பொழுது கோஸலை ரோடி, வெண்பட்டுடுத்து விரதநியம முடையாளாய், தன் திரு மகன் கல்யாணையைக் கருதி, ஸ்ரீமஹாவிஷ்ணுவைத் தியானித்து பூஜித்துத் தயிர், அருந்தம், நெய், மோதகம், அவிஸ்ஸு, பொரி, வெண்மலர்மாலை, பாயசம், எள்ளோதை, சமித்து, பூர்ணகும்பம் இவற்றைச் சித்தஞ்செய்து, வேதியர்களைக்கொண்டு தீவளர்த்தி ஓமஞ்செய்வித்து, தீர்த்தத்தால் விண

ணவர்களுக்குத் திருப்பணஞ செய்துகொண் டிருந்தனள். ஸ்ரீராமபிரானே அவற்றையெல்லாம் கடாக்ஷித்தகொண்டு, அருகே எழுந்தருளுகையில், தாயும தன்னைப்பிரிந்து மீளவும் தன்னருகில் வருகின்ற தன் கன்னறைக் கண்டு, பெண்குரினா மிழந்து எதிர்கொண்டோடிவருவதுபோல எதிர்கொண் டழைத்துவந்து தனக்கு தண்டம்மாபித்தபின் கைகளாலெடுத்தணைத்து உசிமோந்து ஞானத்தினாலும், பருவத்தினாலும, நல்லொழுக்கத்தினாலும், விருதீதர்களாகியும, தரும சீலர்களாகியும், மஹாத்துமாக்களாகியும், ராஜ ரிஷிகளுமாகிய மிருந்த. மூன்னோர்களுடைய நிறைந்த ஆயுளையும, கீர்த்தி யையுடி, குலத்துக்குரிய அறக்கொதயும் பெற்று வாழவாயாகவென வாழத்தி, உன திருத்தமப்பனார் மிகவும் சத்தியமூடையர், தாமாத்துமா, முனபுளர செயதபடி இபபொழுதே உனக்கு யுவராஜ்ஜிய பட்டாபிஷேகஞ் செயவிக் கப்°போகினறனரனறேவென மகிழந்தரைத்து, போஜனஞ்செய்வாயென வீற்றிருக்கத் தவிசு அளித்தனள. நடநத செய்தி யறியாமல், தாய் இவ வகை மகிழந்தவித்த திருத்தவிசைபபற்றி னினறு, இயறகையிலே வினய முள்ளவராயினும, தாயே ! முதற்றெயவமெனனும கள்ணியத்தால், மிக வணக்கமுடையவராய், ஸ்ரீராமசநதிரர் கோஸலேயை நோகதி, என் தாயரே! நீர் நடந்த சங்கதியை யறியீர போலும; உமக்கும, சீதைக்கும், லக்ஷ்மண னுக்கும், பெருந்துயரம நோநதிருக்கின்றது; நான இப்பொழுதே தன்ட காரணியம் செல்கினறேன; ஆதலின், இபபொன்மூயாலெனக் கென்ன செய்யத்தக்கது? ரிஷிகளுக்குரிய இருபத்தைந்து தருப்பைகளாற் செய்யப் பட்ட விட்டரமென்னும ஆசனதில் லூட்காருகாலமனறே.!எனக்கு வாய்தநிருக்கின்றது; இதுமுதல் பதினனகுவருஷம முனிவர்போல மனத் தக்கினிய அரசுனவுகளேவிட்டி, கந்தமூல பலாதிகளைப் புசித்தகொணடு, ஜனஸஞ்சாரமற்று, அசசந்தருவதாகிய வனத்தில் வாசஞ்செயயப் போகி றேன; என் திருத்தமப்பனா எனகுரிய யுவராஜ்ஜியத்தைப் பரதனுகுக் கொடுத்து எனனைத் தண்டகாரணியம்போகும்படி விடித்தார். ஆத லின் யான முனியாகி, ஆறுமெட்டியகூடியவருஷங்களில் வனத்தில்வாசஞ் செய்வேனெனறு அருளிச்செய்தனர். உடனே கோஸலராஜன் திருமகள குட்டாரத்தினுல்வெட்டுண்ட ஆசசாமரத்தினுனிபோலவும, சாபத்தால்விண ணுலகத்தினின்றும் வீழந்த தேவதைபோலவும, வெட்டிச்சாயத்த வாழை மரம்போலவும, தனையில்வீழ்ந்து மூர்சசையடைந்தனள. உடனே ஸ்ரீராம. பிரானஎடித்து, சுமையைச சுமந்திறகினிலத்தில்புரணடெழுந்த பெணகுதி ரைபோன்ற தம் தாயின திருமேனியில் படிந்திருந்த தூளகளைத் தமது திருக்கையால் தடைத்துத்தேற்றினர. கோஸலேயும தெளிந்தெழுநத இனியபேருமாளுங் கேடடுக்கொணடிருக்கையில் தன்னருமைமைந்தனை நோக்கி, என்செல்வத்திருமகனே ! கானமிகுதியும தூயரப்படுவதன்பொ ருட்டே நீஎனக்குத்திருமகனுகப்பிறந்தனை;பிறந்திலியேயாயின் நான் மல டியாயிருந்து இவவகையான கடுநதன்பங்களை யடையேன்றே ?

ఏకఏవహివంధ్యాయా శోకోభవతిమానసః
అపుత్రాస్మీతిసంతాపో నహ్యన్యఃపుత్రవిద్యతే

'ஏகஏவஹிவகத்யாயாச சோகோபவதிமானஸ:
அப்ரஜாஸ்மீதிலகதாபோ நஹ்யன்ய:புதரவிதயதே.

மலடிக்கும் மனததில ஒருசோகமேஅன்றே ? இருக்கும். பிள்ளை யில்லையே யென்பதைவிடடு வேறேஒரு வியஸனமும், அவளுககிராதன றே ? உன்பிதாவினுல் நானிதுவரையிலும் சிறந்த ஆடையாபரணங்களா யினுமை, ஆவலுடன் கலவியின்பதைதயாயினும், பெற்றறியேன்; நீபிறந்த பின் உன்னேப்பறறியாவது அவைகளேப்பெற்று மகிழ்வடைவேனென எண்ணங்கொணடிருந்தேன. நான் எலலோர்களுள்ளுங் கலேவியரியிருந் தும் இனிமேல நான் சக்களத்திச சிறுகஇகளின் இகழ்வான மொழிகளேக கேடடுக்கொண்டேயன்றே ? காலதைதப போகவேண்டும், பெண்டு களுகுச சக்களதிகளிடத்தில தாழ்மைப்பட்டுப பிழைபபதினும் வே றேதுகமென்பது மொன்றுணடோ ? நீ எதிரிலிருந்த காலையிலும, சக் களத்தி யென்னைதாழ்மைப்படுததியதை யறியாயோ ? நீயும் வனவாசம் போயப பரதனுக்கும்படட்மானபின் சகளததி என்னே அவமதிபபுச செயவளென்பதில் ஐயமுண்டோ ? நீவனம்போனபின் நான்மரணமடைய வேணடியதே அல்லாமல வேறேதுணையில்லே. பாத்தாளன்னே உபேகூஹ செய்து கைகேயியை முதன்மையாகச செய்தமையால, நான் அவளுககு உயர்ந்தவளாகவோ அலலது நிகரானவளாகவோ இருந்தும, கைகேயி யைசசோந்த ஒருவெளளாட்டியும என்னே மதியாமல அவமதிபபுச் செய் தாள். இனிமேல் அரசனுகிய பரதன் கணணேட்டததால எல் ஏவலாளர் களும் எனகுகு கீழமைந்து பணிவிடைசெயயாகளே ! எனகுஇதமாக என்னோடு பேசிக்கொண்டிருந்தவர்களும என்னுடன் பேசார்களே. எப பொழுதுங் கோபமேயன்றி மகிழவென்பது சிறிதுமினறி வன்மொழி யுரைகின்ற கைகேயியின்முகத்தில நான எப்படிவிழிபபேன்.

దశసప్తచవర్షాణి తవజాతస్యరాఘవ
ఆసితానిప్రకాంక్షంత్యా మయాదుఃఖపరిక్షయం

தசசப்தசவாஷாணி தவஜாதஸ்யராகவ
ஆஸிதாநிப்ரகாக்ஷமத்யா மயாதுகபரிக்ஷயம்.

நீ அவதாரஞ்செய்துஏழுவருஷஞ்சென்றபின் எட்டாவதாகியகர்ப்ப வாசம் முதலொன்பதாவதாகிய பருவத்தில் உனக்கு உபநயனஞசெயயப பட்டதன்றே?அது உனக்கு இரண்டாவது பிறபபாயிற்று; அதுமுதலாக

இத்வரையில் உனக்குப் பதினேழுவருடங்களாயின. ஆக உனக்கு இரு பத்தமூனறு வயதுசெனறு, இருபத்துநான்காவது வயதன்றே ? இது இதுவரையும், நான் துகமெல்லாந்தீர்ந்து இன்பமடைவேனென்றே எண்ணி எணணிக காலத்தைக கழித்தேன, இவ்வணணம் சக்களத்தி களுககுக கீழ்ப்படிநதிருந்தே மூபபையடைநதும, இனிமேலும் கீங்காத தன்பதைத நான் பொறுததிறேன்; மூழுமதிபோன்ற உன் திருமுகத்தை யுங் காணமல யான் எஙஙனம் உயந்திருப்பேன, விரதஙகளினலும், யோகஙகளினலும், மநறும் பறபல வருதத முயறசிகளினலும, உன்னை நான டிருதியும் அருமையாகபபெறறதேனன்றே ? மழைகாலத்தில மேன் மேலும் பெருகிவருகின்ற சிறநத நதியின பிவளவுக் தாகஙின மாத்திரை யில அதினகரையிடிந்து களைந்து அழிவதுபோல இங்கீங்காத தன்பவௌ ளத்தால மோதபபட்ட என்னுளளமும, இடிநது களைந்து நைந்தன்றே போய்விடல வேணடும, அவ்வணணம் போகாமையினல, இவ்வுள்ளம் அழிவறற சிலேபோன்றதென நினைகினறேன், இறப்பெனபதே எனக கிலலையோ ? யமனுலகத்தில எனககு இடநதானிலலையோ ? இலலாவிடின துயரஙகொணடு சுவகினற பெணமானைச் சிஙகம்பிடித்த முறிதத்துக் கொண்டு போவதுபோல யமன் எனனையென கொணடுபோகவிலலை; எனடினம் எஃகினுலே செய்யபபடடதோ ? அலலாவிடின, ஏல பிளந் தாவது சிதறியாவது போகவிலலை; இவ்வகைத தனபங்களையடைநது மழியாதோ ? காலமலலாக காலதநில, யாவாகாயினும் மரணங்கிடைக குமோ ? களா நிலதநில விதைதத விதைபோல நான செயத தூலஙகளும், விரதங்களும, தானஙகளும், நருமஙகளும, பலனறறன வாயினவே; மனிதாகளுககு நினைததபொழுதே இறகுகு திறமையிருகுமாயின, கன்றுவிட்டுபபிரிநத பசுபபோல, உனனைவிடடுபபிரியும யானும் உயிரை விடடு, யமலோகமபோயச சேவேன், உனனைவிடடு நானமாதநிரம் இஙகுப பிழைதநிருபபதில பயனயாது ? பசு கன்றுசென்றவழியே போவதுபோல நானும் உனனுடன் காடடுகு வருகின்றேன; என்றீவ் வண்ணம பிடித்துக கடடப்பட்ட தன பிளளையை நோகஙின கினனரி புலமபுவதுபோல வாயவிடடுப புலமபியழுதாள.

அயோதநியாகாணடதநில இருபதாவது சருகம்

முறறிறறு

இநதச்சருகதநில (தசஸப்தசவாஷாணி தவஜாதலயராகவ)எனறு ஸ்ரீராமபிரானை நோக்கிக் கௌஸல்ய பதினேமூவயதுளளவராகக்கூறினள. (ஜனஷோடசவரிஷோமே ராமோராஜீவலோசனரி) எனறு பாலகாணடதநில சகரவர்தநி விசுவாமிதநிரரை நோக்கி,ஸ்ரீராமபிரான் பதினறுவயதுக்குங் குறைநதவனெனறுரைதநமையால,விவா ஹத்திறகு முன்பே, ஸ்ரீராமபிரானுக்குப பனனிரணடு வயதுக்கு மேலாகி இருகக

வேண்டுமென்பதில் ஐயமேயில்லை; (பாலோதவாதசவர்ஷோயம் அக்ருதாஸ்த்ரஶ்ச ராகவ:) என்ற மாரீசன் ராவணனைக் குறித்த, ஸ்ரீராமபிரான் விசுவாமித்திரர் யாகத்திற்கு வருங்காலியில், பனனிரண்டுவயதுள்ளவனென்று கூறினன். (உஷித்வாத்வாதஶ்ஸமா இக்ஷுவாகூணும் நிவேசநே) என்றும, (ததரதரயோதசேவர்ஷே ராஜாமரத்யதபரபு:) என்றும், (மமபர்த்தாமஹாதேஜா வயஸாபஞ்சலிம்சக:) என்றும், (அஷ்டாதசஹிவர்ஷாணி மமஜனமநிக்ஷயதே) என்றும், தோபிராட்டியார் வனவாசம் புறப்படுமபோது ஸ்ரீராமபிரானுக்கு இருபத்தைநது வயதெனறும், தமக்குப் பதினெட்டு வயதெனறும்,அருளிசசெயதின்ரூர. இவறறுள் தோபிராட்டியாரதுவாக்கியதைதையும, மாரீசன் வாகயியதையும் பற்றி, ஸ்ரீராமபிரானுகரு. இருபதாவது வயதெனவும, கோஸலியின வாக்கியதைப்பறறிய பதினேழு வயதெனவும், சக்ரவாதநி வாக்கியதைபபறறி, இருபதெடடு வயதெனவும், தோறறுகின்றமையால், இவ்வேறு பாட்டிகருக காரணம் யாதோ வெனின், தோ மாரீசாகளின வாகயிப்படி இருபத்தைநது வயதெனபதே உணமை; கோஸலி வாக்கியதிலும, (ச) எனறிருப்பதிஞல, மற்ரெரு (ஸப்த) என்னும பதததைச சேர்தது, இருபதது+னானகுசெனறு இருபதைநதாம் வயதெனறே பொருள் கூறவேணடி மாதலால, விரோதமிலலே; கர்ப்பவாசம முதல், எட்டாவது வருஷத்தில ஆதனாகளுகரும், பதிஞென்ரவது வருஷத்தில் க்ஷத்திரியாகளுகரும, பனனிரணடாவது வருஷதில வைசியர்களுகரும, உபநயனம் செயயுவேணடுமென்ற விதியிருகினறமையால, உபநயனதகருமுன ஏழுவருஷஙகள் சென்றனவெனறும், பின பதினேழுவருஷங்கள் ஆயினவெனறும் பொருள; கோஸலி வாகயியதகருக கூறவது சரியேவெனில, பதிஞெனரவது வருஷமென ஒருமையாறகூறுது, வருஷஙகளிலெனப பனமையாற கூறினமையால, ஒனபதாவது பதாவது வருஷஙகளிலும், ராஜாகளுகரு உபநயனரு செயயலாகுமெனப் பொருள கொளளவேண்டி மாதலால, விரோதமிலலேயெனக் கொளக. சகரவர்த்தியான் ஙாகயிததிலும், பதினறுவயதகருக குறைதவ னெனபதனால, பனனிரண்டு வயதுள்ளவனெனறே மாரீசன வாகயிததக இசையப பொருள கூறினமையால், விரோதமிலலே, ஆதலின ஸ்ரீராமபிரானுக்கு இருபதைநதாவது வயதும், தோபிராட்டியாருகரு பதினெட்டுவயதரு சென்றனவெனக கொள்க. இவ்வனமாயின, திருகல்யாண காலத்தில, தோபிராட்டியாருக ஆறுவயதும், ஸ்ரீராமபிரானுக்குப் பன்னிரண்டு வயதும் ஆயினவெனக கொள்ளவேண்டுதலால், (பதிஸம்யோகஸுலபம் யோதரூஷ்டவைவமைபிதா) என்ற தமக்கு விவாஹஞ்செயவதறகு முனபே யௌவனம் வாதராகக்கூறிய தோபிராட்டியாரது வாக்கியம் பொருநதுமோ வெனின், ஸ்ரீமஹாலக்ஷ்மியே! அயோநிஜையாகிப் பூமியிற பிறநதிருக்கின்றமையால், அவளுக்கு ஆறவயதிலே இளமைபபருவம் வருவது வியபபனறெனக் கொள்க. ஸ்ரீமஹாலக்ஷ்மி! இலங்கையில் ஓர் தடாகத்தில் தாமரை மலரிறபிறநது, அகஙிருது பூமியிருகுள் பிரவேசித்து, மூனறுவருஷமிருநது, பினபு மிதிலியில பூமியினினறு, வெளியே அவதாரஞசெயதனனென; வேறு புராணததிலிருகின்றமையால், அக்கணக்கினபடி தோபிராட்டியார்குத் திருமணக்காலததில, ஒன்பதவயது சென்றமையால், யௌவனம் வரக்குறையில்லையே; பதினெட்டுவது என்றது, மிதிலியில் அவதாரஞ்செய்தது முதல கணககிட்டி அருளிச்செய்தமையால் விரோதமில்லே; சிலர் ஸ்ரீராமபிரானுக்கு இருபத்தெட்டு வயதென மொழிவார்கள். அவர் மொழி தோபிராட்டியாரது வாக்கியததோடும், மாரீசன்வாக்கியததோடும் பேதபபடுகின்றமையால், உண்மையல்லனவெனக் கொள்ளவேண்டி மாதலால், அப்படிக் கூறுவோர் கருத்தியை யாதெனவுணர்க.

இருபத்தொன்றுவது சருக்கம்.

ஸ்ரீராமபிரான் வனம்புகுத தண்டசெயத தம்பிக்குந் தாய்க்கும் நீதி யருளிச் செ

அவ்வலீகயாகப புலமபுகின்ற கோஸலவரசன திருமகளை நோககி, இளையபெருமாள தமமெணணததை வெளிபபட உரைசெயய இதுவே சமயமெனச சொலலலுற்றனா தாயீரோ! ஸ்ரீராமபிரான கைகேயிக்காக ராஜ்ஜியலக்ஷ்மியை விடடுவிட்டு, வனவாசததுக கெழுந்தருளுவது எனககும் தகுதியாகத தோற்றவிலலை; வயது சென்றவரும, காமவிகாரங் கொணடவரும், போக விருபபுடையவரும, அறிவி னிலகுலைந்தவரு மாகிய சகரவர்த்தியா கைகேயினு லேவபபடடவராய, எதுதான் கட்டளைசெயயார்? ஸ்ரீராமபிரானை நாடடிலிராமல காடடுக்கு ஓடடிவிடும படி இவரென்ன அபராதஞசெயதார? என்ன குறறஞசெயதார? எப் பொழுதுமபிரியாதிருகின்ற நானுமிவா சிறிதுங் குறறஞசெயயக் கண்டி லேன்; பகைஞனையினும் புறததில, ஸ்ரீராமபிரானைத துதிசெயகின்றனே யன்றிச சிறிதும் பழிகக கேடடிலேன், கடவுள போனறவருமு வஞ்சம் சிறிது மறியாதவரும, ஐம்புலனகளையும வெனறவரும், மருவலரிடத்தும் அனபுசெயபவருமாகிய சறபுதத்தினைக் காரணமின்றி, தருமமூணாந்த யாவனையினும, காடுசெலலவிடபபனே? மிகுதியும மூபபை யுடையா ராயினும், மீணடும் பாலனபோலக காமவேடகைகொணடி மெயம்மறந்து கிடகின்ற வேந்தர் வேந்தர் மொழியை அரசுநெறியுணாந்த எந்தபபுத்தி ரனிலும் இதயததில கொணடு, அதறகுடபடடு நடப்பானே? இச்செய தியை மன்னாபெருமான் அறிவதறகு முனனமே என்னுடன் கூடித் திரு வபிஷேகங்கொணடு, இநநகரததை ஸ்ரீராமபிரான் தம்வசஞ செய்து கொள்ளக் கடவர். விலலைக கையிலேநதி யருகிலிருந்து, எனனுல பாது காக்கபபடடு, காலாந்தகனபோல எழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீராமபிரானை எதிர்த்து, ஆஜ்ஞையை மீறி நடககவலலவன யாவன? பரதனேசசேர்ந்த யாவராயினும, ஒருகால தடைசெயவாராயின், அவாகளை யெலலாங் கூர் மையுள்ள கணைகளால, துணிதததக கொலவேன்; சூளுரையினும, எபபொ ழுதும் பிறறமைபூண்டு சாதுவாக இருபபானுயின், அவன யாவராலும், அவமதிசெய்ய படுகின்றனன்றே?கைகேயி வார்த்தையைக் கேட்டு, இம்மஹாராஜரும் இங்குசெயவாரியின, அவரையுங் கொல்வோம்; அல லது பிடித்துக் கட்டிவிடுவோம;—

గురోరప్యవలిప్తస్య కార్యాకార్యమజానతః
ఉత్పథంప్రతిపన్నస్య కార్యంభవతిశాసనం

குரோரப்யவலிப்தஸ்ய காரயாகாரயமஜாநதः
உத்பதம்ப்ரதிபணணஸ்ய காரயம்பவதிசாஸநம்.

செய்யத்தக்கதும் செய்யதகாதது மறியாமல, கர்வதினால் அல் வழியில செலலுகின்றவன் குருவாயிருந்தாலும், அவனைத் தீசசெயல செயயவிடாமல தடைசெய்து, அடககவேண்டியதே தருமசசெய்கை; ஸ்ரீராமபிரானுகருகிய இநத ராஜ்ஜியதைச் என்னபலத்தினால, என்னகார ணத்தினால, கைகேயிகருகொடுகக நினைகிறார். மஹாராஜா ஸ்ரீராமபிரா னையும, என்னையும் பகைதது, அரசுப பெருளுசெல்வதைப பரதனுகருக கொடுகருமபடி அவருக்கு என்னதிறமை யிருகின்றது ? எனதாயே ! நான் உளளூற உம திருமகனரிடதில பதிதலைகொண்டு, இவர் திருவாத்துக கிசைய நடபபதே என கருதது. இவ்வணணம சூதகி யத்தின் மேலும், என் விலலின மேலும், தானதின் மேலும், யாகத்தின மேலும் ஆணையிடடு, உமகரு உறுதிசெய்து கொடுகினறேன,—

தீ ப்ரயுஞ்ஜ்யமர்ண்யம்வா யதிராமஃப்ரவேக்ஷ்யதி
ப்ரவிஷ்டம்தத்ரமாம்தேவி தவமபூவமவதாரய.

தீபதமக்னிமரணயம்வா யதிராமஃப்ரவேக்ஷயதி
பரவிஷ்டம்தத்ரமாம்தேவி தவமபூவமவதாரய.

ஸ்ரீராமபிரான் எரிகின்றதீயில விழுவராயினும, தண்டகாரணியம் புகுவராயினும, என்னையவர்கரு முன்பே தீயில விழுந்தவனுகவும், அர ணியம புகுந்தவனுகவும், நீர நம்புவீராக இனி உமமுடைய துயரத்தைச சூரியன் இருளை நீக்குவதுபோல அடியேன நீகக, இன்பமுறச செய் வேன்; என் திறமையை நீரும் கண்ணுரகாண்க; ஸ்ரீராமபிரானுமகாண்க; என்றிவ்வண்ணம் அருளிசசெய்தனர். இவ்வாறு அருளிசசெய்த இளைய பெருமானுடைய மொழியைககேட்டுக கோஸலைதேவியார் ஸ்ரீராமபிரானை நோககி, அடா எனனருமைத திருமகனே ! என் சக்களத்தியின் நீதியற்ற சொலலைக்கேட்டுப பெற்றதாயாகிய என்மொழியைக் கேளாமல், என்னை விட்டுக் கானகஞ்செல்வது நலமன்று; தம்பி லக்ஷ்மணன் மொழியைக கேட்டுஒழுகுந்தாயன்றே ? இதன்மேல் உன் உள்ளத்துக்கு யாது கல மெனத் தோன்றுமோ அவ்வண்ணம் ஆராய்ந்து செய்வாய்; நீ தரும மூனர்ந்தவனுதலால், தருமஞ்செயயவேணடு மென்பதே உன்னெண்ண மாயின், தாயக்குத் தொணடுசெயவதே சிறந்த தருமமாதலால், நீ என்

சொற்படி இங்கிருந்தே எனகுபு பணிசெயுவாயாக. காரியபமஹரி முனிவா இலலறம் வழுவாமல், தம் திருமாளிகையிலிருந்தே தம தாய்க் குத் தொழும்புசெயது, அதனால நற்பேறு பெறறாரன்றே? மஹாராஜா! பிதாவாதலால, அவா சொலலித தவறலாகா தென்பது உனகுக் கருத் தாகில, நான மாதாவாதலால, என் சொலலியும், தவறலாகாதன்றே ? நானுனகு வனமபோகுமபடி அணுமதி கொடுபபதிலலே; நீ இவ்விடந் துறந்து வனம்போக கூடாதென்று மறுகினறேனெனதலால, நீ இவ்விடத் தைத துறந்து போகதகூடாது, உனனைப பிரிநதபின் இன்புறுவதினும், உயிர் பிழைபபதினறு மபிழைத்தாலும எனகுத துன்பமிலலே, எனனைவிட்டு நீ வனம்புகுவாயாயின, நானிஙகுப பரமபதததைக கருதி, இறததலே நோக்கிகொணடு, உயிர மாய்வேனே அலலாமல, உயிர வைததிரேன்; அநதரம இந்த அதாமததால பிபபலாதமுனிவா நிறததிலசெயத அதர் மதினாலும், மாதாவின பணி தவறிய அதர்மதாலும, சமுததிராஜன பிரஷ்மஹதததிசெய்தவ னடையதததக துனபதைத யடைந்ததுபோல நீயும்உலகமெலலாமறியதகக துன்பதைதையடைவாய; என்றிவவணனம் புல்மபாரின்றனள. அஙஙனம புலம்புகினற தம்மாதாவை நோகஙி, ஸ்ரீராமபிரானதருமவழிகோணமல,அருளிசசெய்கினறார். தாயாரே! நதைதை யார் ஏவுதலிக கடந்து நடகக எனகுத திறமையிலலே; நான் உம்மைத தலிவணஙகி வேணடிககொளளுகின்றேன; நான வனவாசமபோக எண் ணஙகொண்டிருகினறேன்; கணடிமஹாமுனிவர் நதையின வாககியத தினபடி பசுககொலை செய்தனா. நமபெரியோர்களாகிய சகரர்கள அறு பதினாயிரம் பேர்களும், பிதாவின் மொழியினாலே நில் லதைத தோண்டிப பாதலஞசென்று, கபிலமஹாரிஷியால மாணத்தையு மடைநதனாகள். பரசுராமரும் நதையின வாககியததின்படிக கோடாலியால, தம்மை ஈன்றாளாகிய ரேணுகையை வெட்டிக கொலிசெயதனா மற்றும பல பெரியோர்கள, பிதாவின் வாககியததைப பாதுகாபபதறகாகப பறபல செயல்களைச செயதிருகினறார்கள. நானும் தந்தையின் சொறபடி நடப பேனேனனறி அதைச்சிறிதும் வழுவேன, நானெருவனே இப்பொழுது புதி தாக உமக்கு விரோதமாகத் தருமததைககற்பித் தனைசெய்யவில்லே, மேற சொன்ன ஜவர்களெல்லோருஞ் செய்தே யிருக்கினறார்கள, பெரியோர்கள நடந்து தேய்நதவழியிலே நானுஞ் செல்லுவேனல்லது அதை வழுவிநட வேன்; பிதாவின் வாககியத்தின்படி நடப்பவன ஒருவனும் இகலவுலகில் இகழ்வையடையான, புகழசசியையே அடைவானெனறிவ்வகையாக நீதியரு ளிச செயீது, இனையபெருமானையும் நோகஙி, லஷ்மண ! உனக்குி எனமே லுள்ள பத்திமையையும், விசுவாசத்தையும், உனதோணணமையையும், வலி மையையும், சௌரியத்தையும், நான்நன்கறிந்திருக்கின்றேன். என்தரயானவர் தருமத்தின்தூட்பத்தையறியாமல் மிகத் துன்பமடைகின்றீர். யாவுமுணர்ந்த

நீயும், அதற்கிணங்கி யுரைப்பது தகுமோ ? உலகத்தில் தருமமன்றே சிறந்தது; தருமத்திலன்றே வாயமை நிலைமைபெற்றிருக்கின்றது, நம் பிதாவின வாக்கியம், தருமத்தைச சார்ந்தேயன்றித் தருமத்தைசசாராததனறு; தந்தைமொழியையாயினும், தாயின் மொழியையாயினும், அந்தணமொழியையாயினும், செய்வேனென முன்பு வஞ்சினஞ்செய்தது, பின்பு செய்யாமல் தருமத்தையுணர்ந்த நான தவறுவேனே?நான் பிதாவின வாக்கியத்தின் வரம்புகடந்து ஒருகாலும் நடவேன. தநதையின சொல்லின்படி கைகேயியா எனக்குக் கட்டளைசெயதனர். நாணு மதனைச்செய்வேனெனவுப்புக்கொண்டேன. அம்மொழியை நானபொய்மையாகச்செய்யேன. வஞ்சகத்தை மேற்கொண்ட இத்நீயஎணணத்தையிடடுக் கொடுமைநீங்கிச் சமம் பூண்டு தருமத்தை மேறகொண்டு என்கருத்துக்கிணங்க நடப்பாயாகவென். றிவவண்ணம அன்புகூர்ந்தருளிச்செயது, மீளவும கோஸலையைநோக்கிக் கைகூப்பி வந்தனஞ்செய்து, என்தாயே ! நான் வனஞ்செல்லுகின்றேன்; நீர் அருள்செய்து கட்டளைசெய்யக்கடவீர். என உயிரினமேலாணையிட்டு வேண்டிக்கொளளுகின்றேன. இதற்குக் குறுக்குச்சொல்லாமல் வழியிலெனக்கு நன்மையுண்டாகும்படி ஆசீர்வீதஞ்செய்தருளவீர். நானபதினனகு வருஷம் வனவாஸஞ்செய்து என் பிரதிஜஞையை முறறுவித்துச் சுவர்க்கத்தினின்றும் வீழந்த, யயாதிப்புரவலன மீண்டும் விணணுலகஞ்சேர்ந்து மகிழ்ந்ததுபோல மீண்டு வநதிங்கு மகிழச்சியுடன உமக்குப் பணிசெய்து உம்மொழியையும், நிறைவேற்றுவேன; சோகததை யுளளடக்கிகொள்ளீர, தன்பமுறறவேண்டாம்; பிதாவின மொழியைப் பாதுகாத்து மறுபடி இங்கு வருவேன; தாயீரே ! நீரும், நானும், சீதையும், லக்ஷ்மணனும், சுமித்திரையும் எல்லோரும், என் தந்தையின் கட்டளைபினபடியே நடக்கவேண்டும்; இவவாறுநடபபதே அநாதியான சிறந்ததருமம், தாயரே ! தனபத்தையுளளடக்கிக்கொண்டு தந்தையினசொற்படி நானவனவாசம்போவதறகு அனுமதிசெய்யக் கடவீரென் றிவ்வண்ணம் தருமநெறிகோணுமல் ஒரேபிடியாக வுரைசெயதனர். கோஸலை அதுகேட்டு மைந்தனைப்பிரியும பிரிவைச்சகிக்க மாட்டாமல், உடனே மூர்ச்சையடைந்து சிறிதுபொழுதகழித்து, மூர்ச்சை தெளிந்தெழுந்து, ஸ்ரீராமபிரானே நோக்கி, அடா என்னரும்புதல்வனே ! உனக்குத் தந்தைபோலுத் தாயாகிய நானுங் குருவனறே ? நான் உன்னை அனபினுல் வளர்த்தமையினுலும், தேகசம்பந்தத்தினுலும், நீ வனம்புக நான் விடைகொடுப்பதில்லை; துன்பமடைந்த என்னைவிட்டு, நீ போவது தருமியமறறது, உனனைப் பிரிந்தபின், நான் பிழைத்திருப்பதனுலென்ன ! பிதிரருலக மடடுவதினுலாகிலும், தேவருலகமடடுவதினுலாகிலும, என்னுடன்கிருமுகத்தக்கெதிரில் மூசூர்த்தகாலீம் வாழ்ந்திருநதாலும், அதுவே இன்பங்களிலுஞ் சிறந்ததென் றிவ்வண்ணஞ் சோகத்தோனைசெய்தனள். ஸ்ரீராமச்சந்திரர் அவ்வுரையைத் திருச்செவிசாத்தியும் மனிதர் பலர்கூடிக் கொள்ளிக்கட்டைகளைக் கையிலெடுத்துக்கொண்டு,

நாட்டில் தன்வழிபற்றிச செல்லுகின்ற மதயானையைத் தடைசெய்யினும், அது மீளாமல், தன்வழியே செல்லுவதுபோலத் தன் மனநிலை குன்றுமல், வனஞ்செல்லவே துணிவுகொண்டு, சோகங்கொண்ட தம் திருத்தாயையும், தம்பியையும்நோக்கித் தனித்தனி இன்சொல்கூறித் தேறுபலராயினர். இலக்ஷ்மண ! எனமீது உனக்குள்ள பத்தியையும், வலிமையையும், நான் கன்றிவே னாயினும, என கருத்தினை யுணராமல என்மாதாவுடனகூடி, நீயும் சீனனைத் தனபழுதசெயலாகுமோ?இவவுலகினில் தருமம அடியாக வுள்ள நற்பயனகளுக்குக் காரணமாக தருமப பொருளினபங்களன்றே? காணபபட்டன. அவற்றுள்ளும்,அறமினறிப்பொருளினபங்கள்மட்டுமபயன படா; தருமமொனறே முதறகாரணமாகும், மனத்துகினியாளும்,கடடழகி யும், நனமக்களைப பெறறவளுமாகிய மனையாளொருத்தியே முறையே அறமபொருளின்பங்களெனனும் மூனறுபேறுகளையும தருகினறனளனறே? அல்லாவிடின,ஒருதருமத்தால் அர்த்தகாமமோகூங்கள்சித்தியாகாவிடினும, தருமம் வளருமே ? அத்தனமையதாகிய அறத்தைச்செயய முயறசிசெய்ய வேண்டுமே; தருமத்துகினசையாத பொருளினபங்களை ஒருகாலும் செய்ய லாகாது; பொருளின்பங்களை மாத்திரமே தேடுவோர் யாவர்க்குமபகைஞரா கின்றனர்களல்லரோ ?

गुरुश्च राजा च मतौ स्थितौ वृत्तौ क्रियाफले प्रत्यवमर्शकारणात्
यदा व्यतीतौ गुरुराज्यमाश्रयेत्तदा हि कः स्तम्भितुमुद्यतं रथम्

குருசசராஜாசபிதாசவ்ருத்தஃ கரோதாதபரஹர்ஷாதயதிவாபிகாமாத்
யதவயாதிசேதகாயமவேக்ஷயதாமம கஸதனனகுயாதாருசமஸவருத்தஃ.

ஆசாரியீனும், புரவலனும், தந்தையும, மூபபினருமாகிய ஒருவர் பிறற த்தினலாயினும, பெருமஙிழவினலாயினும், காமத்தினலாயினும, வரய்மை தவறுமையாதியாகிய அறத்தைக காக்குமபொருட்டு யாதேனுமொரு காரிய த்தைச் செய்யக்கடவையெனத் தம் புத்திரனை நோக்கி ஏவுவாரயின், தீச்செயல் புரிபவனல்லாத யாவன அக்காரியத்தை யாவலுடன் செய்து, தந்தையைப் பாதகத்திலழுநதாமல் பாதுகாவான ? அடா எனனருமைத் தமபி ! ஆதலின நான் நம தநதையாருடைய கட்டளையை முறையேசெய்து முடிக்காமல தலறிவிடேன; புரவலா பெருமான நம்மிருவருக்குவ குரு; என் தாயக்கும் பர்த்தா ? ஆதலின் நம்மூவருள ஒருவரும் அவா கட்டளைக் குக் கேடு நினைப்பது தகுதியறறது; அவரே நமக்கு தருமம; அனறியும் வாய்மையுளாரும், அறநெறி யொழுகுபவரும், மனனர் மனனருமாகிய மஹாராஜா உய்ந்திருக்கையில்; என தாய், கணவனில்லாத கைம்பெண் வேது தஞ்சமின்றி, மகன் போகுமிடமே போவதுபோல அரசர்பிரானை விட்டு, எனபின் வனம் வருவேனென்பதும் தகுதியாமோ ? என்தாயே

நீன வனம் செல்ல விடைகொடுத்து, ஆசீர்வாதஞ்செய் தனுப்புவீராக; வாயமையினல், யயாதி மீளவும பொன்னுலக மடைந்தாற்போல யானும் மீளவும மீணடு வருவேன்.—

यशोहयहं केवलराज्यकारणात्
नपुण्यकृतंकुलमंमहोदयं
लदीघकालेनतु देविजीविते
वृणेवरंमद्यमहामतर्धृतः

யசோஹயஹம்கேவலராஜயகாரணத நபருஷடஃகாததமலமமஹோத்யம்
அதீகககாலேகதுதேவிஜீவிதே வருணேவராமுதயமஹீமதாமதஃ.

யாக்கையென்பது அழியுந் தனமையுடையதேயன்றி, நெடுநாள் நிலை பெற்று வாழவதன்று; அதன்மேற்கொண்ட விருப்பினல், இழிவாகிய இவ வரசுச் செல்வத்தின பொருட்டு, உடலழிந்தும், உலகமுளளவளையும் அழி வறற நிலைபெறற மேன்மையடக்கும் புகழினைப் பின்புறத்து நிறகசெய்து நில்லேன; ஆதலின தருமவழிசென்று, புகழினைப் பெறுவேனேயல்லது, தருமத்தைத்தவறி அற்பமாகிய இந்த பூமியையாள நான விருப்பமுறேன்; எனறிவவண்ணம, தாய்கும, தம்பிக்கும், நீதிமொழி யருளிசெய்து, மனந்தேறறி, பேராற்றலுடைமையால், தன்டகாவனம் புகுவதிலே துணிவு கொண்டு, தம திருத்தாயைத் தமமிதயத்துள் வலம்செய்தருளினர்.

அயோத்தியாகாண்டத்தில் இருபத்தொன்றுவது சருக்கம்
முற்றிற்று.

இருபத்திரண்டாவது சருக்கம்.

சககரவர்த்தித் திருமகனர் இளையபெருமாளைத் தேறறியது.

அநந்தரம் திருத்தமையனருளிச்செய்த நீதிமொழிகளைக் கேட்டினர்ந் தவராயினும், அவர்மீதுளள பத்தியின் மிகுதியினல், அவருக்குக் கடுங் துயரம் வாயத்ததேயெனச் சோகமும், கைகேயி இவவண்ணஞ்செய்தனளே யீனக் கடுஞ்சினமுங்கொண்டு, கன்களை சிவந்து, கட்டின்ட மதயானை போலப் பெருமூசசெறிந்துநிற்கினற இளையபெருமாளைக்கடாகூடித்து, சக்கர வர்த்தித் திருமகனர் தமமீதுள்ள அன்பினல், இவவண்ண மிருக்கினறு சினத்திருவுளத்தணர்ந்து, ஊக்கத்தையும், தோளவலியையுமே மேற்கொ ண்டு, அடா தம்பி! இதென்ன அறிவிலர்போல வருந்துகின்றனை; சினத் தையுஞ் சோகத்தையும் உள்ளடக்கித் தீரமொன்றையே மேற்கொண்டு, என்னபிஷேகத்துக்குத் தடைநேர்ந்ததுமன்றி, வனவாசமும் போகும்படி

கேரிட்ட இவ்வமானத்தைச் சிறிதும் பாராட்டாமல், இயல்பாயுள்ள மகிழ்வையே கடைப்பிடித்து, எனபிஷேகத்தக்காகச சோத்த பண்டங்களை யெல்லாமெறிந்ததறிவிட்டு, இகழவிலாச் செய்கைகளைச் செய்யக் கடவை. அடா லக்ஷ்மண ! சுமித்திரைபெறற நற்காதலனே ! என்னபிஷேகத்தின் பொருட்டு மனமகிழச்சியோடு பண்டங்களைச் சேர்த்ததுபோல நான் காடு றையப் போவதற்குரிய கருவிகளையும், உளமகிழவோடு சேர்க்கக்கடவை. எனக்கு அபிஷேகம் ஆகவில்லையேயென மனம கெழுகினற என அனனை யார வருந்தாதவண்ணம், நீயும் தன்பமகொளளாமல் மகிழவுட்னிருந்து அவரையும் மனந்தேறும்படி செயயகடவை. நான் வனமபோகாதவரையில் எனக்கு அபிஷேகமாகிவிடுமோவென்னறு கைகேயியார் தவிக்கின்றார். அவருக்கு இவவண்ணஞ் சமகையுறுதபடி முயலக்கடவை. அனறியும், நான் இதகாறுமம பிதாவினிடத்திலாவது, மாதாகளிடத்திலிலாவது, அறிந்தாயினும், அறியாமலாயினுமம, அபராதஞசெய்ததாக எனகருச் சிறிதுந் தோற்றவில்லை, பொய்மமொழி யுளையாதவரும், சொல்லியசொல் தவறாதவரும், சிறந்த பராக்கிரமமுடையவருமாகிய தமப்பனார கைகேயிக்கு வரங்கொடுத்தபடி யான செயயாவிடின் நரகத்தை நேரிடுமேயென அஞ்சுகினற அந்த அசுரஞ்சீர்ந்த மனமகிழ்ககடவா நான அவர வரமளிததபிடி அபிஷேகங் கொளவதை நிறுத்தி, வனவாசம போகாவிடின, வாயமை வழுவிப் போயினுமேயென என தந்தையார் மனந் தவிபபாரீல்லது உகந்தருளார, அவர் மனம் வருந்துவதினுல், என மனமும் மிக வருத்தமுறுமேயல்லது சிறிதும் மகிழவுறாது, லக்ஷ்மண ! ஆதலால், அபிஷேகங்கொளளும் முயறசியைத் தவிர்த்து, இபபொழுதே இவ்விருந்து புறப்படடு வனமபுக விரும்புகின்றேன; எனனே வனதகுசெலல விடுவதினுல், கேகயராஜனமகளா மனமகிழவுகொண்டு, பரதனே யுழைபபித்து அபிஷேகஞ் செய்விபபா, நான மனையுரியுடுத்தசு சடை தரித்துகொண்டு தவசியாகிக கானகஞ்சென்றால அல்லது கைகேயியார மனமகிழவுறார; நான வனவாஸம போகவேண்டுமென்று யார போதனே செயதாகளோ ? அதைககேட்டு யாகரு அவவெண்ண மொக்குமெனத் தோன்றியதோ ? அவர்களையும, சதுரியதத்தில் கடடுண்ட சக்கரவாத்தியாரையும் வருததமுறச்செயய என மனந் துணிவுகொளள வில்லையே, எனகரும் இவவிஷயத்தில சிறிதும் தனபமும் தோற்றவில்லை; இனிக் காலநீட்டியாமல், நாளிபபொழுதே புறப்பட்டு வனஞசெல்வேன்; தம்பி ! நான காணுறையப போவதறகு விதியே காரணமனறி, வேறுகாரணமில்லை; அவ்வனமல்லாவிடின, என்பால மிகக அனபுளள கைகேயியார்க்கு எனனைக் காடு செல்லவிடு வேண்டுமென எண்ணமுண்டாவதற்குக் காரணம் யாது ? லக்ஷ்மண ! நான பெறறதாயாரிடத்துப்போலவே மற்ற தாயர்களிடத்தும் வேற்றுமையின்றிக் குற்றேவல் செய்துவருகிறேனென் பதையும், கைகேயியாரும் பரதனிடத்துப்போல எனனிடத்திலும் மிக

அன்புள்ளவரா யிருந்தனரென்பதையும், நீ கன்றறிந் திருக்கின்றனையன்றே? அத்தன்மையராகிய கேகயன் திருமகளாரே?என்னபிஷேகத்தை ஏன் தடை செய்யவேண்டும்;நான் காடுறைதல் செய்யவேண்டுமென ஏண்ணங்கொண்டு, மோழிவதறகுங்கூடாத வன்மொழிகளே யுரைத்தாரென்பதறகு விதியே யனறி, வேறுன்றும் காரணமாகதென நான் கம்புகின்றேன; இங்ஙன மன்றி, நறகுண நற்செய்கையுடைய கேகயராஜன் மகளும், தன் பர்த்தா முன்பாக இவவண்ணம கொடுமொழிகளே ராணமற்று, மொழிவரோ ? யாவ ராலும் தடுக்கவொண்ணுத அவவிதியே என்மீதும, கைகேயியார்மீதும், வீழந்ததெனபதில் சந்தேஹமேயில்லை; சுமித்திராதேவி குமாரா ! பலனில் ஆழந்தாராயப்பட்டுக் கட்புலனகாம லொழுந்திரிகின்ற விதியை எதிர்த்து அதனைவி போர்செயயவல்லவன யாவலுளன ? இன்பந்தருவதும், துனபந் தருவதும, அச்சமுறுவிப்பதம, சினமுறச்செய்வதம, பயன் பெறுவிப்ப தும், பயனை இழப்பிப்பதம, படைபபதும, தடைப்பதும், இவை முதலிய செயல்களெல்லாம் தெய்வச்செயலகளேயன்றே ? ஐம்புலனகளையுமவெனறு கடிந்தவஞ்செய்கின்ற முனிவர்களும், தெய்வத்தால் பீடிக்கப்பட்டவர்க ளாகிக் காமமுஞ் சினமுங்கொண்டு விதிதலரிய நியமங்களைத் தவிர்ந்து, தவந்துறந்து, கிலேசுலந்தனர்களன்றே ? ஒருவன் ஒருகாரியத்தைசசெய துமுடிக்கத் தொடங்குகையில், அதற்கு யாரும் எண்ணங்கொள்ளா திருக் கையிலே தற்செயலாய்த் தடைநேர்ந்து, மாறுகத்தன்பமோ இன்பமோ விளைவதென்பது தெய்வத்தின செயலே யனறி, வேறுனறினுலனறு; என நிவவண்ணம் கூறிவினுலும, உண்மையாக ஆராயுங்கால எனக்கு அபிஷே கம் நின்றவிடடதேயெனச சிறிதும் துன்பமுண்டாகவில்லை; நீயும சிறிதும் மனம வருந்தாமல், என கருத்துக்கிசைந்து, என்னபிஷேகத்தின் முயற சியை விட்டிவிடக்கடவை. அடா லக்ஷ்மணு ! அபிஷேகத்தின்பொருட்டி சித்தஞ்செய்யப்பட்ட இந்த பூர்ணகுமபங்களே நான் தவசியாக விரதஸ்நா நஞ்செய்வதறகு பயனபடக்கடவன. அனறியில், இவை அரசன் உடைமைப் பொருளகளெனப் படிதலால், இவற்றால் நான் விரதஸ்நாநஞ்செய்வதில்லை; நானே வனத்திறசென்று, என் கையினுலே கொண்டுவரப்பட்ட தீர்த்தமே விரதஸ்நாநத்துக் குபயோகமாகக்கடவது. தமபி லக்ஷ்மணு! அரசுச்செல்வம போயிறறேயென நீ சிறிதும துன்பமுறல்வேண்டாம்; இராச்சியமேயாயினு லென்ன ? வனமேயாயினுலென்ன ? ஆராயுங்கால, அரசுச்செல்வத்திலும், காடுறைதலே சிறந்தது, செங்கோல் வழுவாமல், உலகத்தாரெல்லோர்க்கும் இனியனகி, அரசுசெய்து எல்லோரையும் மகிழவிப்பதென்பது மிகுதியும் வருத்தமாகியதன்றே ? வனத்துக்குப்போனல், ஒருசிலரை யும் பின்றிப் பற்பல வினைதங்களைப் பார்த்துக்கொண்டு, சிறந்த தவங்களையும் விட்டின மின்றிச் செய்துகொண்டு மகிழ்வுறலாகுமன்றே ? இதனை உணர்ந்து நீ உள்ளங்கவலற்க.

கலங்ஙணம்ஸ்மின்கலுகர்மவிகனே மாதாயவீயஸ்யதிசங்கனீயா
தைவாபிபன்னஹிவதத்யனிஷ்டம் ஜானாஸிதை வம்மதாஸ்துபாவம்

கலங்ஙணம்ஸ்மின்கலுகர்மவிகனே மாதாயவீயஸ்யதிசங்கனீயா
தைவாபிபன்னஹிவததயநிஷ்டம் ஜானாஸிதைவஞ்சததாப்ரபாலம்.

ஆடா இலட்சுமணு ! நம்மினேயதாயார் அபிஷேகத்தைத் தடைசெய்த னரேயெனச சிறிதும அவர்மீது சினங்கொளளற்க; தெயவத்தினு லேவப் பட்டவராகி, அவர் அநிஷ்டமுழைத்தனரேயன்றி வேறில்லே; தைவம் அத் தன்மியதாகிய மகிமையுடையதென நீ யுறியாயோ ? இனியாயினும், நீ கோபசோகங்களே நீகடி, மனமகிழ்வுறக கடவையென் றிவ்வண்ணம நீதி கூறி, மனந்தேற்றி யருளினர.

அயோத்தியாகாண்டததில இருபத்திரண்டாவது சருககம முறறிறறு.

இருபத்துமூன்றுவதுசருக்கம்.

ஸ்ரீராமபிரானே வனம்போகவேண்டுமென இளையபெருமாள மறுத்தது.

இவவண்ணஞ் சக்கரவாத்தித்திருமகனு மருளிசசெய்தலும், அதிலு டன்பாடினமையால், இளையபெருமாள தலேகுனிநக அதனேகேட்டுத் திருத்தமையுர யார்சொல்லியுங் கேளாமல், தருமத்தையே கடைப்பிடித் தனரேயெனமகிழசசியையும, ராஜஜியம் பாதுகாக்கவல்ல இவாகருகாடு புகும்படித் தானபம் நேரிட்டதேயெனக் கடிநதனபத்தையு முறறவராகித் திருவபிஷேகத்தைத் தடைசெய்தவர்மீது சினம பெருகபபெருகப் புருவங் களே நெரித்துப பெட்டியிலடைத்துக கோல்கொண்டு தாண்டிய நச்சரவம் போலப் பெருமூச்செறிந்து, சினமகொண்ட சிங்கம்போலப் பார்ப்பவர்கள் அச்சங்கொளளத்தக்க முகமுடையவராய, மதயானேயின துதிக்கைபோனற தம் திருக்கரத்தின் துனியை யுதறிக்கொண்டு, கழுத்தைத் தோண்மே லெடுத்துக் கடைக்கண்ணினுல் தமையனே நோககி, என்னய்யனே ! தந்தை யின் வாக்கியத்தைப பரிபாலனஞ்செயயாது விட்டாரென உலகத்தார் பழிப் பார்களென றுணிந்துத் தேவர் வனவாஸஞ்செல்ல முயற்சிசெய்வது மிகத் தகுதியற்றது, இவவிஷயத்தில தேவர் மயக்கங்கொண்டிருக்கிறீரோ ? அன்றியும், தேவரைப்போன்ற மஹாரூராகள், தேவர் அருளிசசெய்த வண்ண முரைசெய்வார்களா ? சொரியமுளளவாகளிட்டத்தைத் தெயவமென் பது தாழந்ததேயன்றி, ஜீரமுடையதாகாதனறே ? நம் விஷயத்தில் நிறமை

யிற்று, ஒடுக்கிடக்கின்ற தெயவத்தைத் தேவா எடுத்துப் புகழ்வதென்ன புதுமை ? தாய் தந்தையர்களது சொல்லைத் தவறுவது குற்றமென நினைக் கின்றீரே; அது தவறுகாது. அவர்கள் சாதுக்களாகித் தருமமாக வாழ்ஞை செய்து, அதைச செய்யாவிடின் பாவமணுகுமேயன்றி, அவர்கள வஞ்சம் கொண்டு முறையல்லாதன வுரைசெயில், அதனைச் செயயாதொழியின பாவ மணுகுமோ ? அவவிருவர்களும் நியோகமென்று தேவருகளே சங்கை தோற்றவில்லே; இவவுலகில் அகத்திற கசடுகொண்டு புறத்தில் தருமம்முள்ள வர்கள்போல நடிப்பவர்களுந பலருளரொனத் தேவா அறிந்திலீர்போலும், அவவிருவரும் கசடற்றவராகளாயின, தேவருடைய திருவபிஷேகத்தை ஏன் தடுக்கினறனாகள். அன்றியும், இவா கைகேயிக்கு முனபே வரமகொடித் திருந்தாரெனபதும் பொய், அஃது உண்மையாயின், அவள முனனமே வரத்தைப பெறறுக்கொண்டிராளோ?இவரும் வரங்கொடுத்துவிடடாரோ? ஆதலின, அது பசும்பொய; இவாகளுக் கைகேயிமீதுள்ள காதலினுல், அவள சொறபடி தேவராக் காடடிலோட்டக் கருதி, உலகத்தார் முன தம் பழியைக் கழித்துக்கொளவதறகாக, இருவருமகூடி இவவண்ணம ஆலோ சனை செயதுகொண்டனர்களெனவே நம்பவேண்டிய; மூத்த திருகுமார ராகிய தேவர் எழுநதருளியிருகையில், தேவரைவிட்டு மறறொருவனுக்குத் திருமுடிசூட்ட முயறசிசெயதது, உலகநீதிககு விரோதமாகியதனறே ? என்னய்யனே ! தேவரைவிட்டு மற்றொருவன் திருமுடிசூட்டிக்கொளவதைக கண்ணுறறு, அடியேன சிறிதுபொழுதும் பொறுத்திரேன; இவவிஷயத் தில் அடியேன செயயும பிழையைத் தேவா பொறுத்தருளவேண்டிய, எவ விதத்திலும தநதையின மொழியைப் பாதுகாபபதே தருமமென வேற் றுமைகொண்டி வனம்புகுவேனல்லது, திருமுடி பொறுககேனென மருள கொண்டருளிசசெயகினறீர; அது தருமமாயினும, எனக்குப் பகையே யன்றிச செயயத்தக்க தாகாது ? தேவா கருதியவாறு செயது முடித்துக் கொளளுந் திறமையுடையாராயினும், பெணணறிவுக்கு வசப்பட்டி மயங் கிய தந்தையின நீதியறற வாக்கியத்தைச செய்ய ஏன முயலுகினறீர; தாய தந்தைகள பரதனுககு அபிஷேகஞ் செயவிப்பதன்பொருட்டே கபடஞ் செய்து நம்மைக காட்டுக்குச் செலலவிட நினைத்தாகளெனத் தேவர் நன குணராவிடின, என்னயயனும் ? தருமமல்லாததைத் தருமமென மருள கொண்டி, கடுந்துன்பத்தை யுறுகின்றாரே யென்னுந தன்பம் எனக்கு ஒருபொழுதும் நீங்காது; அவவண்ணம் தேவா செயவதும் இகழத்தக்கதே யன்றித் தருமமாகாது; காமாதுராகளாயும, நமக்குத் தாய தந்தையரென் னும் பெயருடையர்களாயிருநதே பனிகளுர்களுமாகிய அவவிருவர்களுடைய எண்ணத்தைத் தேவர் எவவணணஞ்செயய முயல்கின்றீர, இவ்வண்ணம் நேர்ந்தது, தெயவத்தின் செயலேயன்றித் தாய தந்தைகளின் செயலன் றெனத் தேவருக்கு நம்புதலிருப்பினும், அது செய்யத்தக்கதாக அடியே னுக்குத் தோற்றவில்லே; அஃது தேவரால் நீக்கத்தக்கதே யாகும்.

விகலபோவீர்யஹீனோய ஸ்தைவமனுவர்ததே
வீராஸ்ஸம்பாவிதாத்மாயோ நதைவம்பர்யுபாஸதே
தைவம்புருஷகாரேண யஸ்ஸமாததஃபரபாதிதம
நதைவேவ்பன்ஜீர்தஃ புருஷஸ்ஸோவஸீததி.

விகலபோவீர்யஹீனோயஸ ஸ்தைவமனுவாதததே
வீராஸ்ஸமபாவிதாதமாநோ நதைவமபாயுபாஸதே
தைவம்புருஷகாரேண யஸ்ஸமாததஃபரபாதிதம
நதைவேவ்பன்ஜீர்தஃ புருஷஸ்ஸோவஸீததி.

யாவனெருவன பயமுறறவனும, திறமையற்றவனுமா யிருப்பானே அனனே தெய்வம் தெயவமெனறு தெயவத்தை யனுசரிபபான்; யாவர் ஊக்கமுறறுப் பயமற்றவரும, திறமையுற்றவருமாயிருப்பார்களோ அவர்கள தெயவமெனபதைச சிறிதும் மதிககமாடடார்கள தம திறமையினால தெய வத்தைத் தடிககவல்லவா, ஒருகாலும தெய்வததால கெடுதியடைந்து வருந் தார்கள. ஊழின் திறமையையும், ஆன்மையின் திறனிமையையும், ஜனங்கள இப்பொழுதே காணபபோகின்றாகள ஊழினவலி ஆண்மகன்வலி இவற் றின ஏற்றத்தாழசசி இப்பொழுத வெளிபபட விளங்கப்போகின்றன. மதமேறித் தடையினறிக் கொழுத்தத கிரிகளிறுபோனற தெயவ மன்றே ? தேவருடைய ராஜஜியபிஷேகத்தைத் தடைசெயதனெ வருளிச் செயதீர்; அத்தெய்வத்தை யான் ஆன்மைபினால தடுத்தோட்டி விடுகின் றேன கடசூபித தருளவீராக. அஷ்டதிகபாலாகளும, மற்றும் மூவுலகிலு முள்ள சூராகளுங்கூடி எதிர்தது, தேவருடைய திருவபிஷேகததைத தடைசெயய முயறசிசெயயினும், தடிகக வலலவராகாகள. அங்ஙனமா யின நமபிதீரவொருவன தடிகக வலலவனுவானே ? யாவாகள கூடித தூர் யோஜனைசெயது தேவரை அரணணியத்திற கெழுநதருளிப பதினன்கு வருஷம் வாஸஞசெயய வேணடுமெனறாகளோ ? அவர்களே பதினன்கு வருஷம் அரணியஞசெனறு வாஸஞசெயயகடவாகள கைகேயிகளும், மஹாராஜனுகளும், தேவரைக காடடிலோடடிப பரதனுகளுப படடங் கடட வேண்டுமென்பதன்றே ? எணணம், அவ்வெணணததை யான்கெடு ததுவிடுகின்றேன். தெயவமும என ஆணமைக்கஞசி நடகுமாதலால என் ஆண்மையோடு பகைததவர்களுகு ஊழினவலி ஒருகாலு முண்டா காது, எனது கொடிஆண்மை எவ்வணனைத் துன்பந்தருமோ ? அவ்வண் ணம் இனபதருவதறகுத தெயவம் திறமையுளளதாகாது, அதேகமாயி ரம்வருஷங்கள் தேவா லோகபரிபாலனஞ செயததனமேல தேவருடைய திருகுமாராகளே இவ்வுலகதைத யாளகடவாகள, அப்பொழுது திருக குமாரர்களிடததில இவ்விராஜியத்தை நிலைகசசெய்து, மூன்னோர்கள் நடந்தவாறு தேவரும வனவாசத்துக் கெழுந்தருளக்கடவீர்; நம்தன்தை

"நிலைமையற்ற மனமுடையசர்தலால் இபபொழுது நாம் அபிஷேகங்கொண்டபின் குறைவுநேரிடின் பெருங்கபபுக கிடமாருமெனக் கருதி இப பொழுது இவ்வபிஷேகங்கொளள விருப்பமுற்றிலீரோ? இககாரியத்தில் தேவா ஐயங்கொளளற்க கடலேகைகா காப்பதுபோல அடியேன் தேவருக்டைய ராஜ்யதைதப புரளவிடாமல் காதலிபபேன். இவவணணம் வஞ்சினஞசெயது கொடுகக்கிறேன். இவ்வஞசினத்தைத தவறினேனுயின், வீரலோகம்பெறுமல் நரகில்விழுகடவேன். ஆதலின் மஙகளகாமாகிய்த திரவியஙகளைக்கொணடு அபிஷேகஞ செயதுகொள்ளுகடவீர். ராஜ்யபரிபாலனத்தில தேவர் ஊககமுடையீராகக டவீர். அடியேனெருவனே இதற்கெதிர்த்தவரும் வேந்நாகளைத் தடிததடிதது மடிததுத் துரத்திவிட வலலேன்.

नश्च भार्थाविमौ बाहू नधनुर्भूषणाय मे
नासिराबन्धनार्थाय नशरास्तंभहेतवः
अमित्रमर्दनार्थं मे सर्वमेतच्चतुष्टयं

நசோபாததாவிமௌபாஹூ நதனுரபூஷணாயமே
நாஸிராபநதநாரதாதாய நசராஸதமபஹேதவஃ
அமிதரமாதனூர்தம் மேஸாவமேதசசதுஷடயம.

எனது இவ்விரணடுதோளுகளும், அழகுசெயவன மாத்திரமேயல்ல இககோதணடமும், அலஙகாரஞ செயவதன்பொருட்டேயன்று; வாளும் அழகுக்குசகடடிககொளளுநம பொருடடன்று, இககணைகளும ஊனறிநட பபதினபொருடடலல இந்நானகும் பகைவாகளைக கொலவதனபொருட்டன்றே ஒளிசெய்கினறன. சாணைபிடிததுக கூமையாகிய இவ்வாளைகையிற்பிடிதது யான போமுகத்திற செலலுகையில தேவேநதிரனே எதிரத்துவரினும், அவனேயும், மதிககாமலவெனறு வெறறிகொளவேனே யல்லது பொறுததிரேன். பேரர்க்களமும என கூரியவாளினுலை வெடடுணடு சிதறிக கிடகின்ற நாலவகைபபடைகளின உடலகளி னுருபபுகளினுல் நிறைந்துநடபபதற்குமிடமின்றிப பயமுறுவிபபதாகும்,என்வாளின்முனையினுல வெட்டுண்டு வாள்எலும்புகளில தாகுகையில தீககணஙகளினுல, ஒளியுளளனவா யெரிகினற குன்றுகளபோலவும, மின்னுடனகூடிய காளமேதஙகள்போலவும் விளஙகுகினற பகைஞர்களது களிறுகள தாயில் வீழுபோகின்றன. யான் உடம்புத்தோலினுல கைவிரலி மறைதததுகடடிக் கோதணடதைதக் கையிலேந்திப் போர்முகத்தில் நிற்கையில யாவனென்னை யெதிர்த்து ஆண்மைகாடட வலலவன், பலகணைகள் தொடுத் தொருஞூணியும், ஒரோபாணந்தொடுத்துப பல வீரர்களையும், கொல்லுமாறு தோயானை குதிரைகாலாள்களின் தொடபடுறுப்புகளில் சரங்களைத் தொடுதலையேன். இப்பொழுதுதான்எனதுகணபபயிற்சித்திறமையின்

பிரதாபம், தந்தையினசாளுகையைக் கெடுப்பதற்காகவும், தேவரீருக்
கதனே நிலைகசசெயவதற்காகவும், வெளிப்பட விளங்கப்போகின்றது.
நற்சாந்தமப புரிவதறகும், தோளவலிகளணிவதற்கும், இரவலர்களுக
குப பொருள்களே யீவதற்கும், அன்பர்களிப்பாதுகாததல் செயவதற்கும்,
தருந்தனவாயினும், அடியேனுடைய இவ்விரணடுகரங்களும், தேவருக்
குக குற்றேவலசெய்யக்கடவன. அடியவர்களுககு மெயயாகிய என்னய்
யனேதேவருடைய திருவபிஷேகத்தைத தடைசெயபவாகளேத தடுக்கும்
விஷயததில இபபொழுதே எவரோயாயினும், அவர்களது யிரையும் மாய்த்
துக் கீர்தியையும், கெடித்து உறவினரையும், வேரறுத்து அவமானஞ்
செயயக்கடவேன் இந்தஎவலிதத தேவா அடியேனுக கருளிசசெய்யக் கட
வீர். இந்த வியனுலகமுழுதும், தேவருககு வாப்படடு நிலைதிருக்கு
மாறசெயயும்படி அடியேனுககுக கட்டளைசெய தருளகைகடவீர அடி
யேன் தேவருககுக குறறேவலாளன்ரே ? என்றிவ்வண்ணம் கினத
தோடும், சோகததோடும், விண்ணபபஞ்செயதனர். சகைகரவர்ததிதிரு
மகனுர் அவவிணணபபததைத திருவுளதகிற கொணடவராயினும், சிறி
தும் மனந்தளராமல இளேயபெருமாளேக கடாசூழிதது தம் திருகைகத
தால் அவரதுகணணீரைத துடைதது கன்மொழிகூறித் தேறறி, அடா
என்னருமையிளைஞனே ! நீ எங்ஙனமுறைசெயினும, எனமனம வேறறு
மைப்படாது, நான பிதாவின்மொழியைப பரிபாலனஞ் செயவதிலேயே
உறுதியுளளவனென நம்பகைகடவை இதுவே நலலவழியாகுமலலது நீ
யுரைபபது சிறிதும் நலலவழியாகாது இனிநீ எனனே மறுபபதையொழி
நது என்கருததுகைகிசைந்து நடநதுகொளளுக கடவையென மூடிவு அரு
ளிசசெயதருளினர.

அயோதகியாகாண்டததில இருபத்துமூன்ரூவது சருக்கம
முறறிறறு

இருபத்துநான்காவதுசருக்கம்.

ஸ்ரீராமபிரான் தான்வனமபோகத் தாயைச சம்மதிகைசசெயதது.

ஸ்ரீசக்கரவர்த்திக் திருமகனுர, இவ்வண்ணம் யாவாசொல்லியும்,
கௌாமலபித்ருவாக்கிய பரிபாலனததிலேயே உறுதிகொண்டிருபபதைக்
தோலைரோஜன் திருமகள் நன்குணர்ந்து இனி இவனேத்தடுபபதில் பய
னில்லையெனத் தோந்து, கண்ணீர்பெருகி அந்தோ, எனனருமைதிரு
மகன் சக்கரவர்தகிக்குபபிறந்து, எல்லாவுயிரகளுக்கு மினியனுகவு மிரு

நீது, திககற்றவன்போல்வனஞசென்று பிசசையெடத்து எங்ஙனம்பிழை
கதிருப்பான், இவனுடைய ஏவலாளர்களும், அடுத்தவர்களும், அறுவகை
யுண்டிகளையுமூண்டு மகிழ்ந்திருக்கையில் இவன்மட்டும் காடுசேர்ந்து
கந்தமூலபலங்களே எபபடி உண்ணலாம் ? ஸ்ரீராமன் வனவாஸம்போகி
ன்றனென்பதைககேட்டு யாவனதான் இஃது ஒக்குமென உடன்படுவான்.
இதைககேடட யாவர்கும் தான அசசந்தோறறது. நறகுண நற்செயகை
யுடையனாகி, யாவர்கு மினியனாகிய ஸ்ரீராமனும காடடிலோடடுபபடு
கின்றனனறே ? ஆதலின் தெயவமென்பது மிகசசிறந்தது அதைததடை
செயய யாவராலும முடியாது. என்னருமைபுத திருமகனாகிய ஸ்ரீராமா ! நீ
லோகாபிராமனாகவிருந்து என்னைப்பிரிந்து கானகத்துக்குச் செல்லுகை
யால ஏன் உளளத்தினுள்தோன்றிய சோகமென்னுந தீயானது உன்திரு
முகத்தைக்காணுமை யெனனுங காறறையுடையதும், புலம்புவதனால
கிய துயரமென்னும் ஓமவிறகையுடையதும, அழுவதினாலாகிய கன்னீ
ரென்னும், ஓமஞசெயயபபட்ட ஆஹுதியுடையதும், கவலையினாலாகிய
கொதிபபென்னும, மிகுந்த புகையுடையதும, நெட்டுயிரபபினாலாகிய
ஆயாசத்தினால் வளாகபபட்டதுமாகிப் பனிகாலமகீங்கிய பின்னர் புதல
களைகாட்டுத தீபபறறி யெரிபபதுபோல எனனைபபறறி யெடுகெரியெரி
த்துவிடுமே நீ எனனும கார்முகில ஆனாதமெனனும மழைபொழிந்தா
லல்லது அத்தியணையாதே யான் எவ்வண்ணம பொறுததிருபபேன்.
ஒரு பசுவானது தன்கன்று சென்றவிடம செலலாமல எவ்வாறு பாதது
நிறகும், என் திருமகனே ! நானும நீ செலலுமிடமே வருவேன். என்
றிவ்வகையாக மிகுதியும் துயர்கொண டிரைசெயதனள கோஸலி தன்
திருமகனரும், தம்தாயின் மொழியைககேடடு மீளவுந் தாயைநோககி,
என் தாயிரே மஹாராஜர் கைகேயிதேவியினால வஞசனைசெயயபபடடு,
மிகவுந் தன்பமுற்றிருகின்றனர். யானும அரணியஞசென்று, நீரும்
அவரருகிலிருந்து உபசாரஞசெயயாமல எனனுடன்வந்து விடுவீராகில
அவர் கணபபொழுதாயினும, உயிருயந்திராரென நான உறுதியாயுரைப
பேன்.—

भर्तुःकिलपरित्याग्रो नृशंसःकेवलं स्त्रियाः
सभवत्यानकर्तव्यो मनसापविचिन्तितः

பாத்துஃகிலபரித்யாகோ நருசம்ஸஃகேவலம்ஸ்த்ரியாஃ
ஸபவத்யாநகர்த்தவ்யோ மநஸாபிவிசிந்திதஃ

குல்மகள் கணவனைவிட்டுப் பிரிந்துபோவதென்பது மிகக்கொடியது
ஆதலால் நீர் உலகத்தார் பழிப்புகளுள்ளாவீர் அதுபற்றி மனத்திலும்,
அவ்வண்ணங் கொளலாகாது. என்தநதையார் ஜீவிததிருகுமளவும், நீர்

அவர்க்குப பணிசெய்யகடவீர். இதுதான் பெண்களுக்குத் தொன்மை யான தருமமென்று மேலியோர் அருளிசெயதனசொன்றனர். கோலலை யும், தன் திருமகன வாக்கியததைக கேட்டு, நன்காராய்ந்து,மிக மகிழ்ச்சி கொண்டவளாகி, அடா என பெறலரும புதலவனே ! நீ யுரைசெய்த வண்ணமே யான் நடந்துகொளவேனென உடன்பா டுரைதனள்.

ஸ்ரீராமசந்திரர் மீளவும கௌஸலியாதேவியை நோக்கி, என்தாயீரே ! மஹாராஜர் எலலோர்களும இறையும், குருவும, போஷகருமாயிருத் தலால, நீரும் நானும சசகரவுதநியா கடடளையை வழுவாமல, பாது காக்கவேண்டுமேயலலது தடைசெயவது தகுதியாகாது; தகுதியாக யான் ஒனபதும் ஐந்துங்கூடிய இவ்வருஷங்களே யரணியதது லெளிதில கழி ததுவிட்டு, மீணடிங்கெயதி நின கடடளையின்படி மகிழ்ந்து வசிப்பே னென உரைசெயலகேடடும், ஸ்ரீராமபிரானது பிரிவைப் பொறுக்க மாட் டாமல, அடா என் திருமகனே ! இசசகலதிகளி னடிவில நான் வாசஞ செயதுய்வது தகுதியன்று, ஆதலின, எனனையும பெணமானபோல அளிழதுகொணடு போகச கடவையென்று, கோஸலை யழுது புலம்பு தலும், ஸ்ரீராமபத்திரரு சோகங் கொணடவராயத தாயை நோகி, அமமா ! நீரும இவ்வணணம உரைசெயவது தகுமோ ? குலமகளுகு நாயகனே தெயவம, நாயகனே பிரபுவாயிருததலின, உமக்கும எனகும மஹாராஜரே பிரபுவாவார, லோகநாதராகிய மஹாராஜா பிழைதிருக கையில, நாம அநாதர்களலலோம, அனறியும, நாம வனருசெனறு, பரதன அபிஷேகங்கொணட போதிலும, உனகுக குறைவிலலாடாது; கைகேயியா மனம வேறுகயிருகவிலலும, பரதன அததனமையனலலன், அவன தருமசிநதையுடையவனும், தாமிகனும, எலலாவுயிராகளுகு மினியனுமாருவான, ஆதலின, அவன உமது திருவுளததினபடி நடபபா னலலது, வேறுக கூடவான; நான வனமபோன பினபு மஹாராஜா புதிர சோகத்தால வருநதாதவணணம் நீர ஊககததுடன் அவாகளு உபசாரஞ செயது பாதுகாததுத் தேறறகடவீர மிகக கொடிய இச்சோகம அவனைப பறறி எரிகாதவணணம நீர பாதுகாகக்கடவீர்.

व्रतोपवासनिरतायाः नारीपरमोत्तमः
भर्तारंनानुवर्त्तेत साधुपापगतिर्भवेत्
भर्तुश्शुश्रूषयानारी लभतेस्वर्गमुत्तमं
अपियानिर्नमस्कारा निवृत्तादेवपूजनात्

வ்ரதோபவாலயநிரதாயா நாரீபரமோத்தமா
பர்த்தாரம்நானுவர்த்தேத ஸாதுபாபகதிர்பவேத
பர்த்துசசிர்ரூஷயாநாரீ லபதேஸ்வாகமுத்தமம
அபியாநிர்நமஸ்காரா நிவருத்தாதேவபூஜநாத.


யாவளொருத்தி விரதோபவாசங்கள்செய்து, பரபுருஷனேக்கண்ணுற் பாராமல, பரிசுதனாகி யிருந்தும், தன் பர்த்தாவை மதிக்காமல், அவனுக கிசைந்து நடவாளோ? அவனை நரகத்தை யடைவளே யலது, சுற்கதி யடையாள; யாவளொருத்தி தேவதாபூசை செயயாதவளும், பெரியோர் களேத தொபூதவளுமாயக கொடியளாகியிருந்தும், தன் பர்த்தாவின் மனததுக கிசைந்தபடி ஏவலசெயது, தன பாதத்தாலை மகிழ்விப்பாளோ? அவள் சிறந்த வாறுலகதையே யடைவாளலது, கெடுதி யடையாள; ஆதலின், குலமகள பாததாவுகுப பணியே செய்யக்கடவள். இதுவே அநாதியாகிய தருமமென வேதததிலும்ஸ்த பபடுகின்றது;ஸ்மிருதிகளிலுங் கூறபபடுகின்றது; ஆதலின், என தாயரே! நீரும் மஹாராஜாகருத திருத் தொண்டு செய்துகொண்டே, என் பொருட்டு வேளவிமுதலிய காரியங் களில நனமலர்களினுல தேவதைகளேப பூசனேசெயது, வேதியர்களுக கும் பொருளளித்து, எனக்கு நன்மையுண்டாகவேண்டுமெனப பிரார்த் தனே செயதுகொணடு நான மீணடு வருங்காலதையே எதிர்பார்த்திருக ககடவீர். இவ்வண்ணம் நீர் நியமமுடையீராய, கணவருகுத் தொண்டு செய்து வருவீராயின, மஹாராஜரும் என சோகததைப பொறுத்துப் பிழைததிருபபார், நான மீண்டு வந்தபின்னர், நீர் மிகுதியும் மகிழசசியை யடைவீரென்று மனந்தேறறி யருளிச்செயதனர். கௌஸலியாதேவி அதனேக்கேடடுப புத்திரசோகத்தால பீடிகபபடடவளாய தன் திரு மகனேநோகி, ஸ்ரீராமா! காடுசெலவதில உனகுறற உறுதியைத தவிர்க்க யான வலலவளலல். விதியைத் தடுபபதற்கு யாராலும முடியாதன்றே? ஆதலின, என திருமகனே! நீ மிகுதியும ஊககதுடன் போயவரக கடவை. உனக கெபபொழுதும் நன்மையே யுண்டாகககடவது. நீ வனஞ் சென்று, தந்தைமொழியை நிறைவுசெயது, பெரும்பேறு பெற்றவனுய மீண்டு வந்தபினனர், உனனேகணடு நான பெருமகிழ்வுகொண்டு வாழ் வேன; தெயவகதி யாவர்களும் எணணுவதற்கு மரியது. தெயவமனறே? என்னேயும் போயவாவெனறு விடைகொடுகுகும்படி செயகினறது; ஆத லின், என திருமகனே! நீ சுகமாகச செலலகடவை. திரும்பிவந்தபின் என்னே மகிழவிபபாய்; இந்தக் காலமே அந்தகால மாகுமா? ஆகுமாகில், நீ ஜடாஜினதாரியாகித் திருமபிவரகணடு மகிழ்வுறவேனன்றே? என் றிவ்வண்ணம மொழிநது, நான் சோகங்கொணடு தடைசெயினும, புலம் பிக் கதறினும், ஸ்ரீராமனுகு நனமை பயகுகாதெனவும், பயனுமிலதென வந் தேர்ந்து, சோகததை யுள்ளடகி, மகிழ்வுடன் போய்வாவென விடை யுரைதது, ஸ்ரீராமபிரானுகு நன்மையையே மனத்தில் கருதிக்கொண்டு கவலையுறறு மீற்றிருந்தனள்.

அயோத்தியாகாண்டததில இருபத்துநான்காவது சருக்கம்

முற்றிறறு.

இருபத்தைந்தாவது சருக்கம்.

கோஸலை ஸ்ரீராமபிரானுககு ஆசிர்வாதஞசெயது செலலஷிதததல.



ஜூஙந்தரம் கோஸலை சோகததை யுளளடகஙிக காலகைகளைச் சுத்தி செயது, ஆசமனமபணணிக் தூயளாகி, ஸ்ரீராமபிரானுககு ஆசிர்வாதஞ செயயலாயினள. அடர் எனனருமைத் திருமகனிய ஸ்ரீரகுகுலதிலகா ! உனனுளளதகினுறுதியைத் தடைசெயய யாராலும முடியவிலலை யாதலால், நீ சுகமாக வனஞசெனறு, விரைவில மீணடு இனிது வாகைகடவை. ஒருபொழுதும நலலொழுகைக வழுவாமலிருகக்கடகீவ. அடா ராகவ சார்ததாலா ! எவவளவு துனபம நேரிடினும, எததருமதததைக கைவிடலாகாதென நீ இடைவிடாது காததுவருகினறனனேயோ ? அததருமம் உனனைப பாதுகாகைகடவது. எனன அழிவிலலாப பெருவாழவே ! கற சந்திகளிலும, தேவாலயஙகளிலும, நீ தினந்தோறும எததேவகளுககு வநதனஞசெயகின்றனனேயோ ? அவாகளும நீ காடடில மீளுவிகளுடன வாசஞசெயதகையில, உனனைக காததருளகைகடவர்கள விசுவாமித்திரமகா முனிவர் உனகைகருளசெயதளித்த கணைகளும உனனைக காகைக்கடவன. மாதாபிதாகளுககுத் திருப்பணிசெயதலினாலும, சத்தியதலினாலும, காக்கபபட்டவனாகி, நீ கெடுகாள வாழவாயாக; ஸமிதகுகளும, தருப்பங்களும, பவித்திரஙகளும, ஓமம வளாததுமிடஙகளும, கடவுளர் மந்திரங்களும, தேவதாபூசைகைகாகச செயத இடஙகளும, மலிகளும, மரஙகளும, இலைகளும, மடிகைகளும, பறவைகளும, பனைகஙகளும், சிஙகஙகளும, உன திருமேனியைக காகைக்கடவன. சாதிய தேவாகளும, விசுவ தேவாகளும, மருதகுகளும, மஹரிஷிகளும, தாதாவிதாதா பூஷாபகன அரியமன எனனுந் தேவர்களும, இந்திரன் முதலிய லோகபாலாகளும, பகூஷம, மாசம, ரிது, ஸமவதஸரஙகளும, இரவும, பகலும, முகூரதமும, உனகைபபொழுதும் நனமையையே பயகைகடவாகள. தியானமும், யோகமும, தருமமும, உனனை இடைவிடாது காகைக்கடவன. ஸநதகுமாரும, ஷணமுகனும, சோமனும, பிருஹஸ்பதியும, ஸபதரிஷிகளும, நாரதரும, உனனை எலலாவிடங்களிலும காததருளகைகடவர்கள. மறறும எல்லாவிடஙகளிலும், நன்கறியுமபடி யுளளவாகளும, திக்குகளும விதிகருக்கும் இறைவர்களும், என்னுல தூதிசெயயப்படடவாகளுமாகிய தேவராகளெலலோரும், வனத்தி லுனனை அலலும பகலும பாதுகாத்தருளகைகடவர்கள். ஏழுகுலாசலங்களும, ஏழுகடலகளும், வருணனும, குபேரனும, தேவலோகமும், ஆகாயமும், பூமியும, எல்லாதிகளும, நகூஷத்திரங்களும, நவக்கிரஹஙகளும, அவைகளுககுத் தலைவர்களும, இராப

புல்களும், காலிமாலை சந்திகளும், வனவாசியாகிய உன்னைப் பாது காக்கக் கடவர்கள. ஆறு ரிதுக்களும், பனனிரண்டு மாசங்களும், வருஷங் களும், முகூர்த்தங்களும, நாழிகைகளும், விநாடிகளும், திசைகளும், உன் சேபாருட்டு நனமையளிகக்கடவன. மூனிவேஷங்கொண்டு நீ வனத்தில சஞ்சரிக்கையில, தேவர்களும், தைதியாகளும், உனக்குச சுகத்தையே பயகக்கடவர்கள. அரக்காகளிடத்தும், பிசாசர்களிடத்தும், கண்டவர்கள அச்சமுறத்தக்க தீசசெயல புரியும், மற்றமுளள மாம்ஸதைதத தின்னுங் துஷ்ட ஜந்துக்களிடததும், உனக்கு ஒருக்காலும் அச்சந்தோன்றுமை யுண்டாகக்கடவது. வானரங்களும், தேளசனும், காட்டுகளும், கெதகு களும், மலேப்பாம்புகளும், புழுகளும், கொடி, செடி, புதாகளிலு ளிருணடு, கோமாகிய வனதநி லுனகுப பீடைசெய்யாதன வாகக கடவன. பெரிய யானைகளும், சிஙகங்களும், புலிகளும், கரடிகளும், காடடுபபனறிகளும், காடடெருமைகளும், உனகுப் பீடைசெயவதற நிருகக்கடவன. அடா என திருமகனே ! மறறும் மானிடரைக கொலை புரிந் துண்ணும் தியவிலங்குகளும் எனனுலிங்கு வழிபாடு செயயபபட் டனவாகி, உனனை வருததாதிருக்கடவன. நீ செலலும் வழிகளும் மங்கலகரஙகளாக்கடவன. உனது தோளவலிகளும் பயனபெறக்கடவன. என்னருமைத திருமகனே ! பேறுகளெலலாம் கைக்கூடுவதனபொருட்டு நீ நனகுசென்று, மீணடெழுந்தருளுவாயாக. ஆகாயத்திலும், பூமியிலும், இருக்கின்ற தேவர்களெலலோர்களிடத்தினினறும், உனக்கு மஙகல முண்டாகக கடவது. உனகுப பகைஞராஞராயினும், அவர்களும் உனகு நனமையே செயயகக்கடவாகள. தேவகுருவும், சோமனும், சூரி யனும், குபேரனும், யம்னும், என்னுல பூசனைசெய்யபபட்டவர்களாகித் தண்டகாரணியத்தில வாளஞ்செகினற உனனைப் பாதுகாததருளக் கடவர்கள் அகினியும், வாயுவும, புகையும், ரிஷிகளுரைகின்ற மஙதிரங களும், உனனைக காகக்கடவன. எலலா உலகஙகளையும படைகும் பிரமனும், அவற்றையளிகும ஸ்ரீமஙநாராயணனும், மஹாரிஷிகளும், மறறுமுள்ள தேவர்களும், வனவாசியாகிய உன்னைப பாதுகாததருளக கடவர்களென ஆசீர்வதித்தனர. இவ்வணனம் கோஸலராஜன் திரு மகள் கந்தபுஷ்ப தூபதீபாதிகளினுலும், தோததிரஙகளினுலும், தேவ தைகளெலலோரையும் பூசனைசெய்து, பெரியாலுகிய அநதவனனைக கிராணடு தீவளர்த்தி, நெய், வெணமை நிறமுளள மாலைகள், ஸமித்துகள், வெள்ளைகடிகு முதலியவற்றுல் ஓமஞ்செய்விதது, மிகுந்த ஹவிஸ்ஸி னுல், வெளியிறசெயயததக்க பலியைச செய்விததுத் தூனபம் விலகச செயயும் கன்மஙகளையும், நன்மை பெருகும்படிசெய்யும் கன்மஙகளையும், தேன், தயிர், அகூதை, நெய்களால் மூடிப்பித்து, வேதியர்களைக்கொண்டு நலந்தருமொழிகளை ஒதுவித்துப் புரோஹிதருக்கும், மற்றுள்ள வேதியர் களுக்கும், தக்கபடி தகூழினைகொடுத்து, அவர்களையும் மகிழ்வித்துத்,

தன் திருமகனே கோக்கி, ஸ்ரீராமா! தேவேந்திரன் விருத்திராஸுரனைக் கொலைசெய்யப் புறப்படுகையில, அவனுகருண்டாகிய மங்கல முனகரு முண்டாகக்கடவது. வைகதேயன் அமிர்தம்கொணடுவரப் புறப்படு கையில, வினதாதேவி அவள்பொருடடிச செயத மங்கலமு முனகருண் டாகக கடவது. அமிர்தம் மதனஞசெயயுங காலையில, தைதயர்களுட்ன போர்செய்ய முயன்ற தேவாகளுகரு அதிதிசெயத மங்கலமும், உனக் குண்டாகக்கடவது. ஸ்ரீமந்நாராயணன வாமனவதாரஞ்செயது, மூவுலகங் களையும், மூன்றடியாக அளக்க முயறசிசெயகையில, அவருகருணடாகிய மங்கலமும், உனக் குணடாகக்கடவது. மங்கலங்களுகரும் மங்கலம் செயயும் ரிதுக்களும், சாகரங்களும், திவுகளும், வேதங்களும், உலகங் களும், திசைகளும், உனகரு மங்களமளிகக்கடவன. எனறிவவண்ணம ஆசிர்வாதஞசெயது, சிறறில அகநதைபிடடிச சந்தனபபபி இடுகவண யாவையும் போகவலல மூலிகையைக கையிலகடடி மங்கிரிதது ரனகூ, செயது, மனத்தில சோகங்கொணடவளாயிலும், புறமதில சிறறாந் தோன்றாமல மகிழவுகொண்டவளாகி, ஸ்ரீகோதணடராமனே எடுததணை தது உசசிமோகது மகிழகது, ஸ்ரீராமா! நீ குறையெனறனறி மகிழ்ந் தவனுகிச சுகமாகப போயவருவாயாக நீ வனவாஸந்தீராகது திருமபி இங்குசெயதி யபிஷே.கங்கொண்டி அரசநீதிவழுவாமல ராஜநியபரிபாலனஞ செய்கையில், நான கணகள குளிரகணடி மகிழுவேன; நீ யவ்வணமம அரசுசெயதுகொணடி சீதாதேவியினுடைய காதலியும், எனனுடைய விருபபையும், நிறைவுறச்செய்க. அடா ஸ்ரீராமா! இபபொழுது நீ சுக மாக வெழுநதருளக்கடவை. எனனுல பூசனைசெயயபபடட ஹரிஹராதி தேவகணஙகளும், மஹரிஷிகளும், பூதங்களும், தானவ தைதேயமஹோ ரகர்களும், பத்தாத திசைகளும், நெடுநாள வனவாஸஞ்செயயும், உன கருத்தகணஙக நலஙகளே செயயகடவர்களெனறு ஆசீர்வதித்தனர். எனறிவ்வண்ணம் ஸ்ரீராமசந்திரனுகரு ஆசீர்வாதம் முதலிய விதிகளை முறைபபடி செயது முடித்துச் சோகததை யடகியும், புதிதிரவாச்சரி யததால சோகததையடகக முடியாமல, கண்ணீர் பெருகத தன திரு குமாரனே வலம் வந்து, பலமுறை எடுததணைதது தழுவிகொணடனள

தத்ராஸ்தேவ்யாஸ்கருத்ப்ரதக்ஷிணோ நிபீட்ய மூர்துன்சரணோ புனர்சிரஸி
ஜகாமசீதாநிலயம்மஹாயசாஃ ஸராகவஃபரஜவலத்ஸலயயாஸ்ரீயா.

ததாசதேவயாஸகருத்ப்ரதக்ஷிணோநிபீடயமாதசசரணௌபுனஃபுனஃ
ஜகாமஸீதானிலயம்மஹாயசாஃ ஸராகவஃபரஜவலத்ஸலயயாஸ்ரீயா.

சிறந்த புகழ்பெற்றவரும் இயற்கையாகிய தமது திருமேனியொளியால் விளங்குகின்றவரும், பிதாவின் வாக்கிய பரிபாலனத்தில் உறுதிகொண்ட

"ஆருமாகிய, அந்த ஸ்ரீராமசந்திரா தம்மாதாவினுல் அவ்வண்ணம் ஆசீர்வசனஞ்செயது வலஞ்செய்யப்பட்டவராகி; அவளது திருவடிகளைப் பல முறைபணிந்து விடைபெற்றுக்கொண்டு, சீதாபிராட்டியினரண்மனைநோக்கி எழுந்தருளினர்.

அயோத்தியாகாண்டத்தில் இருபதைந்தாவது சருக்கம் முற்றிற்று.

இருபத்தாறுவது சருக்கம்.

சக்கரவர்த்தித் திருமகனர் தம்செயதியைச சீதாதேவிக்கு அருளிச செயதது.

ஸ்ரீராமபிரான் தண்டகாவன மெழுந்தருளுவதறகாகத் தம்மாதாவைப் பணிந்து, அவளால் ஆசீர்வசனஞ்செய்யப்பட்டவராய விடைபெற்றுத்தரும நெறிவழுவாமல் நின்று மக்கள நிறைந்த நெடுந்தெருவைத் தமதிருமேனி காந்தியால் விளங்கசெயபவராகித் தாம மிக நறகுணமுடையவ ராதலால் இவர் வனவாஸம் எழுந்தருளுகின்றாரேயெனத் துயரங்கொண்ட அம்மக் கள் மனத்தை முறிப்பவரபோலச் சீதாபிராட்டியார, அரண்மனைக் கெழுந் தருளினர். சீதாபிராட்டியார், இங்குநடந்த சரித்திர மொன்றினையு முண ராதவளாதலால் தம் பாத்தாவுகுத் திருவபிஷேகமாகபபோகின்றதேயென எண்ணித் தேவகாரியங்களை விதிப்படிமுடித்து அரசுக்குரிய தருமங்களை யுணர்ந்தவளாதலின் மனமகிழச்சியுடையவளாகி,ஸ்ரீராமபிரானை இங்கெழுந் தருளுவாரென்றே எதிர்பாத்துக்கொண்டிருந்தனள். அத்தருணத்தில் சக் கரவர்த்தித திருமகனர் அங்கெழுந்தருளித் தமக் கபிஷேகமென மகிழ் வுறறு நிறைந்திருக்கின்ற மாந்தர்களைக்கண்டு, வெட்கத்தால் குனிந்து கீழ நோக்கிச செல்லுகையில், சீதாபிராட்டியார, தம்பதி சிந்தைகொண்டு சோக மும, கோபமும், கொண்டவர்போல எழுந்தருளுவதைக்கண்டு, தாமும் சிந்தையுஞ் சோகமுமடைந்து பர்த்தாவைநோக்கி, என் பிராணநாதரே ! மகிழ்வடையத்தக்க காலையில் தேவர சோகங்கொண்டிருக்கின்றீரே ! இதற் குக் காரணமென்ன? இப்பொழுது பிருஹஸ்பதி தைவதமாகிய புஷ்யநக்ஷத்

---

* இச்சருகததிலகூறியது கூறனெனலும் நூறகுறறம பலசுலோகஙகளிலதோறறு மெனபார; சிலர், கோஸலை தன திருமகனமீதுளள அன்பினுலும், சூகாதிதினுலும், தேவாமுதலானோ தாமே தீமைசெய்யாமைகாகவும, தீமைசெயபவர்களை மறபப தறகாகவும், நனமைசெய்வதறகாகவும், தன்மகன பிழைசெய்யினும், அதனைப் பொ றபபதறகாகவும், சிலரைப் பலவாறு வேண்டிக்கொண்டமையால் அஃதி ஒருபொழு தும, நூறகுறற மாகாதெனவுணர்க.

நிரம் வந்திருக்கின்றதேனப் பண்டிதர்களாகிய அந்தணர்கள் சொல்லுகின்றார்களே ? ஆதலின இது திருவபிஷேகக்கொளளுங் காலமன்றே ? இப் பொழுதும் துன்பமடைந்திருக்கக் காரணம் யாது ? அதனை யாளிச்செயல் வேண்டும், தேவர் திருமுகமண்டலமும், நாறு சலாகைகளுடைய நிறை போல வெண்மைநிறமுள்ள திருக்குடையால் மறைக்கப்பட்டதாக ஏன் விளங்கவில்லை ? நூறிதழுத் தாமரைபோன்ற திருக்கன்னியுடைய திருமுகம் முழுமதிபோலவும், அன்னம்போலவும், நிலவுகின்ற வெண்சாமரைகளால் வீசப்பட்டதாகி, ஏனொளிசெயயவில்லை ? சிறந்த சூத மாகதவந்திகளும் துதிசெயகினறவர்களாகி, ஏன் தேவருடன் வரவில்லை ? வேதம்வல்ல மறையவர் அபிஷேகங்கொண்ட தேவருடைய திருமுடியில் விதிப்படி தேன் தயிர் முதலியவற்றை ஏன் அபிஷேகஞ்செய்யவில்லை ? நாடிநகரத்தவரெல்லோரு மேன் பின்றொடர்ந்து வந்திலர் ? நான்கு சிறந்த சேதிகைகள கட்டி அலங்காரஞ்செய்யப்பட்ட உற்சவத்தின்பொருடடுச் செயயபபட்டுப் புதிய ரதமென்னுக தேர் தேவாமுன்பாக ஏன் செல்லவில்லை ? கீருண்டமேகம போலவும், அஞ்சனமலைபோலவும, விளங்குகின்ற சத்துருஞ்சய மென்னும், யானை ஏன் முன்னடந்திலது ? பத்திராஸனமுதலிய அபிஷேகத்துக் குரியன யாவுஞ் சித்தமாயிருககத் திருவபிஷேகங்கொளளாமல இவவண்ணம் இவகெழுந்தருளுவதறகுக் காரணம்யாதோ ? அதனை யருளிசெய்ய வேண்டும்; இதுவையில் தேவர் திருமுகமண்டலம் இங்ஙனம் வேறறுமை யடைந்ததேயில்லை; திருவுளத்தில் மிகச்சோகமுற்றதுபோலத் தோற்றுகின்றதேயென் றிவவண்ணமுரைத்துப் புலம்பினா. சக்கரவர்த்தித் திருமகனார அதுகேட்டுப் பிராட்டியாரைநோகஙகி கேளடிஜானகி ! ஸத்தியவஸ்தராகிய என்தந்தை கைகேயியார்க்கு முன்பு இரண்டுவரமளித்தனர். இபபொழுது குலமுறைப்படி சக்கரவர்த்தியார் எனக்கபிஷேகஞுசெயவிகக முயற்சிசெயதைக்கண்டு, நான் பதினான்குவருஷம் வனவாஸஞ் செயயவேண்டுமென்றும், பரதன் யுவராஜனாக வேண்டுமென்றும் கைகேயியார் அவவிரண்டு வரங்களையும் விரும்பினர். வாய்மை தவறலாகாதெனச் சக்கிரவர்த்தியார், என்னைப் பதினானகுவருஷம் காடடிறையச்செல்லும்படி கட்டளையிட்டனர். ஆதலின் நான் வனம்போகபபுறப்பட்டு நின்னைக கண்ணுற்றுப் போவதற் காக இங்குவந்தேன், நீ நற்குலத்திற்பிறநதவளும், தருமமுணர்ந்தவளும், நல்லொழுக்க முடையவளுமாதலால், இஃது, நலமேயென் றுடன்பட்டுக் கேட்டக்கடவை.

बुद्धियुक्ताहिपुरुषा नसन्तेषवरस्तवं
तस्मान्नतेगुणाःकथ्या भरतस्याग्रतोयथा

रुततियुकतहिपुरुषा नसंहरतेपरस्तवं
तसमान्नतेगुणःकतया भरतस्यागरतोमम.

